2017 மார்ச் 21]

கேட்டிருக்கிறார்கள். துறை அதிகாரிகளைக்கொண்டு ஆய்வு செய்யப்பட்டு, சாத்தியக்கூறுகள் இருப்பின் கண்டிப்பாக அத்திட்டம் கொண்டுவரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 54, மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ. அலெக்சாண்டர், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

54—

பொறியியல் கல்லூரி

***5532—திரு. வீ. அலெக்சாண்டர்:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அம்பத்தூர் தொகுதி, அம்பத்தூர் பகுதியில் பொறியியல் கல்லூரி துவக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், உயர் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) திருவள்ளூர் மாவட்டம், அம்பத்தூர் தொகுதி, அம்பத்தூர் பகுதியில் பொறியியல் கல்லூரி துவங்குவது குறித்த கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லையென்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ. அலெக்சாண்டர், இருக்கையில் இல்லை,*

வினா வரிசை எண் 55, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. பாரதி, மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.